**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**காணொளிகாட்சி விசாரணை (Video Conference)**
**ஆணை நாள்: 04.06.2025**

**முன்னிலை**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

…………

**வழக்கு எண். SA 710/F/2025**

திரு. R. ஜெகன்மோகன் ... **மனுதாரர்**

**/ எதிர் /**

பொதுத் தகவல் அலுவலர்/
தனித்துணை வட்டாட்சியர்,
தேசிய நெடுஞ்சாலை நிலமெடுப்பு,
திருநெல்வேலி இருப்பு நாகர்கோவில்,
O/o.Special District Revenue Officer (LANH).
249, Matharsasangam Road, Sargunaveethi,
Nagercoil - 629 004. ... **பொது அதிகார அமைப்பு**

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.R.ஜெகன்மோகன் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.த.ராஜேஸ், பொதுத் தகவல் அலுவலர்/ தனித்துணை வட்டாட்சியர், தேசிய நெடுஞ்சாலை நிலமெடுப்பு, திருநெல்வேலி இருப்பு நாகர்கோவில், அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 15.07.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் கிராமம், புல எண் 204/7ல் நான்கு வழிச்சாலை அமைக்கும் பணிகளுக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டது தொடர்பான தகவல்களை 4 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர்/ தனி வட்டாட்சியர், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (நி.அ) அலுவலகம், தேசிய நெடுஞ்சாலை எண் 744, விருதுநகர் அவர்கள் 29.07.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(3)இன் கீழ் பொதுத் தகவல் அலுவலர்/ தனி வட்டாட்சியர் (நி.எ), தேசிய நெடுஞ்சாலை எண் 47 & 47B, நாகர்கோவில் அவர்களுக்கு மாற்றம் செய்துள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர் 19.08.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் மேல்முறையீட்டு அலுவலர், 29.08.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர் 18.11.2024 நாளிட்ட பிரிவு **19(3)**இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள ஏற்கனவே கடித எண் ஒ.மு.(அ1)/477/2024, 03.09.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாகவும், மேலும் கடித எண் Roc.No.A1/477/2024 dated 29.05.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக பதிவஞ்சல் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, ஒப்புகை அட்டையின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் 29.05.2025 நாளிட்டு வழங்கிய தகவல்களைப் பெற்றுக் கொண்டதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டதை இவ்வாணையம் உறுதி செய்து, ***இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது***.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 710/F/2025</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தனித்துணை வட்டாட்சியர்,
தேசிய நெடுஞ்சாலை நிலமெடுப்பு,
திருநெல்வேலி இருப்பு நாகர்கோவில்,
O/o.Special District Revenue Officer (LANH).
249, Matharsasangam Road, Sargunaveethi,
Nagercoil - 629 004.

**<u>வழக்கு எண். SA 710/F/2025</u>**
**<u>மனுதாரர் / மேல்முறையீட்டாளர்</u>**

திரு. R. ஜெகன்மோகன்,
எண் 15/25/2, Palace Road,
Thuckalay - 629 175.
Kanyakumari District.

Copy to: Judgement File/ Spare.
JE / PA 05.06.2025.